# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)


| தரம் - 06 | குடியியற் கல்வி – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி-I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. பெரும்பாலான பாடசாலைக் கீதங்களில் பாடசாலையானது............போன்று மதிக்கப்பட்டு இயற்றப்பட்டிருக்கும்.
 1. அதிபர் 2. ஆசிரியர் 3. தாய் 4. மாணவர்கள்

02. கல்விச் செயற்பாடுகளின் தலைவராகச் செயற்படும் நடிபங்கிற்குரியவர்,
 1. அதிபர் 2. நலன் விரும்பிகள் 3. பெற்றோர் 4. மதகுரு

03. பிள்ளைகளது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பாடசாலை,
 1. பிரிவேனாப் பாடசாலை 2. தேசிய பாடசாலை
 3. ஆரம்பப் பாடசாலை 4. பிள்ளை நேயப் பாடசாலை

04. பாடசாலையின் இலக்கினை அடைய பங்களிப்புச் செய்யும் குழு,
 1. பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பாடசாலை முகாமைத்துவ குழு,
 2. ஒழுக்காற்றுக்குழு
 3. விளையாட்டுக்குழு
 4. நலன்விரும்பிகள் குழு

05. மாவட்டத்தின் தலைவர் யார்
 1. தலைவர் 2. மாவட்டச்செயலாளர் 3. தவிசாளர் 4. கிராமசேவையாளர்

06. நுணுக்கமாகச் செவிமடுப்பவரின் துலங்கல்களில் ஒன்று,
 1. கேள்வி கேட்டல் 2. தவறாகப்புரிதல் 3. அவமதித்தல் 4. ஒழுக்கமின்மை

07. மனித வளங்களிற்கான உதாரணமாக கொள்ளப்படுவது,
 1. சூரியவெளிச்சம், செங்கல் 2. நீர், மரத்தளபாடம்
 3. கண்ணாடிப்பொருட்கள், கூரை ஓடுகள் 4. செங்கல், நிலம்

08. அவுக்கண புத்தர் சிலை எங்கே அமைக்கப்பட்டிருக்கின்றது?
 1. திருகோணமலை 2. வவுனியா 3. அனுராதபுரம் 4. யாழ்ப்பாணம்

09. அவுக்கண புத்தர்சிலையின் உயரம்,
 1. 48அடி உயரம் 10அடி அகலம் 2. 39அடி உயரம் 15அடி அகலம்
 3. 10அடி உயரம் 39அடி அகலம் 4. 39அடி உயரம் 10அடி அகலம்



kalvi.lk

10. உக்கலடையாத பொருட்களில் ஒன்று,

1. கடதாசி 2. பொலித்தீன் 3. ஆடைகள் 4. இலைகள்

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளம் இடுக.**

11. ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும் ( )
12. பொருத்தமற்ற உடை அணிவதை நாம் தவிர்க்க வேண்டும் ( )
13. பௌதீகவளங்கள் இரண்டு முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. ( )
14. எமது நாட்டில் இருபத்தைந்து நிர்வாக மாவட்டங்கள் உள்ளன. ( )
15. தவறான புரிதல் மோதலுக்கு வழிவகுக்கும் ( )

**கீழே கொடுக்கப்பட்டவற்றிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.**

16. மனிதனின் தலையீடின்றி இயற்கையாகவே உருவான சூழல் .......................................... ஆகும்.
17. ....................................................... பிரதேசங்களில் வெப்பமான காலநிலை நிலவுகிறது.
18. சனத்தொகை செறிவு குறைவாக இருப்பினும் கூட, நகரமயமாக்கலுக்கு உட்பட்ட பிரதேசம் .............................................. ஆகும்.
19. சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தி பொதுமக்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் அரச அலுவலர்............................... ஆவார்.
20. ....................................................... இலங்கையின் இலவசக் கல்வியின் முன்னோடியாவார்.

(பொலிஸ்/ C.W.W. கன்னங்கரா/ நகரசபை/ பௌதீக சூழல் / யாழ்ப்பாணம்/ மன்னார்)

(20x2 = 40 புள்ளிகள்)

## பகுதி -II

**முதலாம் வினா கட்டாயமானது. ஏனையவற்றில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01. பின்வரும் சுயவிபரக்கோவையைப் பூர்த்தி செய்யவும்.

1. முதலெழுத்துடன் பெயர் :- ......................................................
2. பிறந்த திகதி :- ...................................................
3. இவ்வருடம் தை 1ம் திகதி உமது வயது,

   ஆண்டு .................... மாதம் ...................... திகதி .....................

4. தனிப்பட்ட முகவரி :- .................................................
5. அவசரகாலங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர் :- .....................................
6. அவரது தொலைபேசி இலக்கம் :- ..........................................................................................
7. உமது பாடசாலையின் பெயர் :- ..........................................................................................
8. விலாசம் :- ..........................................................................................

9. தொலைபேசி இலக்கம் :- ..................................................................................................

10. உமது இல்லத்தின் பெயர் :- ..................................................................................................

11 ..................................... 12. ................................................

திகதி ஒப்பம்

(12x1=12**புள்ளிகள்**)

02.

1. மரியாதைமிக்க உரையாடலின் பண்புகள் மூன்று எழுதுக.
2. மொழியைக் கவனமாகவும் சரியாகவும் பயன்படுத்த வேண்டியுள்ள சந்தர்ப்பங்கள் நான்கு எழுதுக
3. கல்வி கற்பதனால் கிடைக்கும் பயன்கள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

03.

1. உங்களிடம் காணப்படும் உயர்ந்த பண்புகள் மூன்று குறிப்பிடுக.
2. C.W.W கன்னங்கராவினால் வெளிப்படுத்தப்பட்ட திறமைகள் நான்கு தருக?.
3. ஒரு நபரிடம் காணப்படும் பலவீனமான பண்புகள் ஐந்து குறிப்பிடுக.

(3+4+5=12 புள்ளிகள்)

04.

1. பாடசாலைக்கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.
2. பாடசாலைச்சின்னம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் நான்கு குறிப்பிடுக.
3. உமது பாடசாலையினை அடையாளப்படுத்தும் சின்னங்கள் ஐந்து குறிப்பிடுக.

(3+4+5=12 புள்ளிகள்)

05.

1. நீர் மாசடைதலை எவ்வாறு தடுக்கலாம் என்பதற்கு மூன்று உதாரணங்கள் தருக.
2. நீர் மாசடைவதற்கான காரணங்கள் நான்கு எழுதுக.
3. உமது பாடசாலையிலுள்ள பொதுச்சொத்துக்கள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

06.

1. கனியவளங்கள் மூன்று குறிப்பிடுக.
2. இலங்கையில் உள்ள வாவிகள் நான்கு எழுதுக.
3. உள்ளூர் உற்பத்திகள் ஐந்து எழுதுக.

(3+4+5=12 புள்ளிகள்)

07.

1. உள்ளூராட்சி நிறுவனங்கள் மூன்று குறிப்பிடுக.
2. இலங்கையில் உள்ள இனங்கள் நான்கு தருக.
3. பிரதேசத்தில் காணப்படும் சமூக நிறுவனங்கள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page